(அ) அரசு ஆவன செய்கிறது.

(ஆ) தற்போதைய சூழ்நிலையில் செய்யாறில் உற்பத்திக் கூடம் மீண்டும் திறக்கும் உத்தேசம் அரசுக்கு இல்லை.

திரு. அ. தேவராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தை எடுத்து விட்டதால் பாதிக்கப்பட்டு நிறைய பேர் வேலையில்லாமல் இருக்கிறார்கள். உடனடியாக அவர்களுக்கு வேலை கிடைக்க ஆவன செய்ய முடியுமா? எப்பொழுது செய்யப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மையத்தில் 69 பேர் வேலை செய்தார்கள். மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு பதவியேற்ற பின் இது வரை இதில் 32 பேர்களுக்கு காஞ்சீபுரம் டால்கோ கூடத்தில் வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது. மீதி உள்ளவர்களுக்கும் விரைவில் அரசு ஆவன செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 257 திரு. தா. வேடியப்பன். மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர்.

257—

சத்துணவு மையங்கள் புதிதாக ஏற்படுத்தல்.

*6185—திரு. தா. வேடியப்பன் :

மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) போளூர்—காங்ஙூர் ஊராட்சியில் உள்ள சோழங்குப்பம் கிராமம், திண்டிவனம் ஊராட்சியில் கணேசபுரம் பகுதிகளில் சத்துணவு மையங்கள் புதிதாக ஏற்படுத்த அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது பரிசீலிக்கப்படும் ?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : தற்சமயம் இல்லை.

திரு. தா. வேடியப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவருடைய புகழைப் பரப்பி, நிலை நிறுத்திக் கொண்டிருக்

1992 மார்ச் 17]

கக்கூடிய நமது இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் 500 குடும்பங்களுக்கு மேற் கொண்டு, 120 குழந்தைகள் உள்ள போளூர் ஒன்றியத்தில் உள்ள காங்கேயனூர் ஊராட்சியில் உள்ள சோழங்குப்பம் என்ற கிராமத்திலேயும், திண்டிவனம் ஊராட்சியில் கணேசபுரம் என்ற கிராமத்திலேயும் புரட்சித் தலைவருடைய புகழை நிலை நிறுத் தும் வண்ணம் சத்துணவு மையங்கள் ஏற்படுத்த அரசு முன் வருமா ? அப்படிக் கூடிய விரைவில் அதனை அமைத்து, நல்ல முறையில் இந்த ஏழை எளிய குழந்தைகளுக்கு உணவு வழங்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப் பினர் குறிப்பிடும் திண்டிவனம் ஊராட்சியில் அத்திமூர் கிராமத் தில் ஒரு மையம் 80 குழந்தைகளுடன் இயங்கி வருகிறது. போளூர் வட்டாரத்தில், காங்கேயனூர் கிராமத்தில் ஒரு மையம் 55 குழந்தைகளுடன் இயங்கி வருகிறது. ஒரு குழந்தைகள் நல மையம் துவங்குவது என்றால், குறைந்த பட்சம் 70 குழந்தைகள் இருக்க வேண்டும். இதற்குக் குறைந்தபட்சம் ரூபாய் 15,000 ஆண்டுக்கு செலவு ஆகிறது. உலக வங்கி உதவியுடன் ஊட்டச்சத்து திட்டம்—2 இந்த மாவட்டத்தில் 1993இல் அமல்படுத்தப்படும்பொழுது புதிய மையங்கள் முழுவதும் அந்த மாவட்டத்தில் துவக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 258. திரு. எம்.எம். எஸ். அபுல்ஹசன், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

258—

தமிழகத்திலுள்ள மசூதிகளைச் சீரமைக்க நன்கொடை வசூல்.

* 5727 திரு. எம். எம். எஸ். அபுல்ஹசன் :

மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழகத்தில் உள்ள அனைத்து மசூதிகள், தர்காக்கள் மற்றும் மையத்து கொல்லைகள் ஆகியவைகளை சீரமைக்கும் பொருட்டு பொதுமக்களிடமிருந்து நன்கொடைகள் பெறும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது வசூல் **செய்யப்படும்** ?

(இ) மசூதிகள் எப்போது சீரமைக்கப்படும். ?